LIBRARY
9 - APR 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 17th August 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I. CONDOLENCE RESOLUTION REGARDING DEMISE OF DR. U. KRISHNA RAU, SPEAKER, MADRAS LEGISLATIVE ASSEMBLY.

DEPUTY SPEAKER : I regret to announce to the House the passing away of our Speaker Dr. U. Krishna Rau on 3rd August 1961 and request the Hon. the Leader of the House to move the Condolence Resolution.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆழ்ந்த வருத்தத்துடன் நான் இந்தத் தீர்மானத்தைச் சபை முன் வைக்கிறேன். நாயகனை இழந்த ஒரு சபையாக இன்றைக்கு இது விளங்குகின்றது. அவருடைய மறைவைக் குறித்துத் துக்கத்தைத் தெரிவிக்கும் முறையில் இந்தத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கின்றேன்.

"This House places on record its deep sense of sorrow at the passing away on the 3rd August 1961 of Dr. U. Krishna Rau, Speaker of the Legislative Assembly from 30th April 1957 to 2nd August 1961 and requests the Chair to convey to the members of the bereaved family its profound sympathy with them in their great loss."

டாக்டர் கிருஷ்ண ராவ் அவர்களைச் சென்ற பத்து ஆண்டுகளாக நன்கு தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. 1952-ம் ஆண்டில் தேர்தல் நடந்து, அவர்கள் இந்தச் சபையில் ஒரு அங்கத்தினராக வந்தபோது, அவர்களுடைய தொடர்பைப் பெறக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதற்குப்பின் அவர்கள், மந்திரி சபையில் என்னுடைய சகாவாக இருந்து, இரண்டு ஆண்டு காலம் அரிய பணியாற்றினார்கள். தொழில் துறை, தொழிலாளர் துறை, போக்குவரத்துத் துறை ஆகிய மூன்றையும் அவர்கள் நிர்வகித்து, தம்முடைய திறமைக்கும் நேர்மைக்கும் நல்ல பெயரைப் பெற்றிருந்தார்கள். அந்த இரண்டு ஆண்டு காலத்தில் அவர்களைப் பல முறைகளில் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருந்தது.

ஒரு சிறிய நிகழ்ச்சி என் ஞாபகத்திற்கு வருகின்றது. இந்த சட்டசபையில் ஒரு சமயம் மந்திரி சபையைப் பற்றிய நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அதன் மீது விவாதம் நடந்துகொண்டிருந்தது. அதை நாங்கள் கவனித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது அவர்

[Sri C. Subramaniam] [17th August 1961

"இதையே நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றீர்களே; கால் பந்து விளையாட்டுப் போட்டியொன்று நடக்கிறது, அதற்குப் போய்விட்டு வரலாம்" என்று வெளியே அழைத்துப் போய்விட்டார். ஒரு மணி நேரம் கழித்துத்தான் வந்தோம். இப்படி எவ்வளவு நெருக்கடியாக இருந்தாலும்கூட, அந்த நெருக்கடியினால் தம்முடைய மனது பாதிக்காதபடி நடந்துகொள்ளக்கூடியவர் அவர் என்பதை அந்த நிகழ்ச்சி நிரூபித்தது. இப்பொழுது போல் அல்ல, காங்கிரஸ் கட்சியினுடைய பலம் அப்பொழுது. ஒரு வோட்டு, இரண்டு வோட்டு வித்தியாசம் இருந்த காலத்திலே கூட, அவர்கள் எவ்வளவு பெரிய நெருக்கடி வந்தாலும், அதைச் சமாதானமான முறையில், சாந்தமான முறையில் சமாளிப்பதற்கு முயற்சிப்பார்கள். மற்றவர்களுக்கும் அதே முறையில் ஆலோசனை கூறுவார்கள்.

அதற்குப் பின், நம்முடைய சபையின் சபாநாயகராக அவர் 1957-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கு அவர்கள் அந்தப் பதவியை எவ்வாறு நிர்வகித்து வந்தார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். அதிலும் முக்கியமாக, விவாதத்தில் ஏதாவது சூடு ஏறுகிறதென்றால், அதைத் தணிப்பதற்கு அவர்கள் எவ்வளவு உதவினார்கள் என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். பல சமயங்களில் அவ்விதம் அவர் நமக்கு உதவியிருக்கிறார். அவருடைய திறமையும் ஆற்றலும் அதன் மூலமாக நன்கு விளங்கினதை நாம் எல்லோரும் கண்டிருக்கின்றோம்.

சென்ற சட்டசபைக் கூட்டத் தொடர் நடந்த காலத்திலேயே அவர் உடல் நலம் குன்றியிருந்தார்கள். அந்தக் கூட்டத் தொடருக்கு முன்பே, அவர்களுக்கு இருக்கும் வியாதி கடுமையானது என்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. டாக்டர் என்ற முறையில் அவர்கள் அந்த வியாதியின் கடுமையை உணர்ந்திருந்தார்கள். இருந்தாலுங்கூட, அவர்கள் சபைக்கு வந்திருந்து, தலைமை வகித்து, நடவடிக்கைகளை நடத்தியபோது அவர் வியாதியினால் பாதிக்கப்பட்டிருப்பதாக யாரும் நினைத்திருக்கவே முடியாது. அந்த அளவுக்கு அவர்கள் மனதைச் சாந்த நிலையில் வைத்துக்கொண்டு பணியாற்றி வந்தார் என்பதை நாம் எல்லோரும் கண்டோம்.

அவர் நம்மிடையேயிருந்து நீங்கியது இந்தச் சபைக்கு மட்டும் ஒரு நஷ்டமல்ல; நம்முடைய நாட்டுக்கே ஒரு நஷ்டம் என்று நாம் அதைக் கொள்ளவேண்டும். வெறும் டாக்டராக மட்டும் அவர் தன் வாழ்க்கையை நடத்தவில்லை. டாக்டர் தொழில் நடத்துகின்ற காலத்திலேயே பொது வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு, அந்தத் துறைகளில் எல்லாம் அவர்கள் முன்னுக்கு வந்து புகழ் பெற்றுக்கொண்டிருந்தார்கள். முக்கியமாக, சென்னை நகர சபையில் அவர்கள் ஆற்றிய பணி என்றும் மறக்க முடியாததாகும். அங்கு மேயராகவும் இருந்து அரும் பணி ஆற்றியிருக்கிறார்கள். அகில இந்திய மெடிகல் கௌன்ஸில் போன்ற பொதுச் சபைகளிலும் அவர் பெரும் பணி ஆற்றியிருக்கின்றார்கள். அவரது உடல் இன்றைக்கு மறைந்து

17th August 1961] [Sri C. Subramaniam]

விட்டாலுங்கூட அவருடைய புகழ் என்றும் நிலைத்திருக்கும். என்றும் நிலைத்திருக்கவேண்டுமென்றும் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்தித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை நான் இநதச் சபை முன் வைக்கின்றேன்.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, I associate myself with the sentiments expressed by the Hon. the Leader of the House. I have known late Dr. Krishna Rau for over two decades and was intimately connected with him since 1952 when he was elected for the first time to the Madras Legislative Assembly. As Minister of Industries and Co-operation then, he did his part quite well. Besides that, he was connected with many social institutions and clubs in the Madras City. Wherever he was, he was very popular and had innumerable friends all round. As Speaker of the Madras Legislative Assembly, he was very impartial and was upholding the traditions and dignity of the House very well. He had won the appreciation of all sections of the House. Madras State has lost one of its illustrious sons and to me, Mr. Deputy Speaker, it is a personal loss. Therefore, I also express my deep regret and request the House to unanimously pass the Resolution brought forward by the Hon. the Leader of the House.

* Sri C. N. ANNADURAI: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நாம் மிகுந்த துக்கத்தோடு கூடியிருக்கிறோம். டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்களுடைய இனிய முகத்தைக் கண்டு களித்துக்கொண்டிருந்த நாம் இன்றையதினம் அவருடைய மறைவினால் மனம் உடைந்துவிட்ட நிலைமையில் கூடியிருக்கிறோம். டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்கள் சட்டமன்றத் தலைவராக இருந்து நல்ல பணியாற்றினார்கள் என்பது மட்டும் அல்லாமல் சபைக்குப் புதிதாக வந்த எங்களைப்போன்ற உறுப்பினர்களை எல்லாம் நல்ல பணியாற்ற வேண்டுமென்று தூண்டிக் கொண்டும், துணை புரிந்துகொண்டும் வந்திருக்கிறார்கள். அதன் மூலம் புதிதாக சட்டமன்றத்திற்கு வருகிறவர்களை எப்படி எல்லாம் நடத்திச் செல்லவேண்டுமென்ற ஒரு நல்ல பயிற்சியைத் தந்தார்கள் என்று எண்ணுகிறபோது, தக்க ஆசிரியர் ஒருவரை இழந்துவிட்டதாகவே என்போன்றவர்கள் கருதவேண்டி இருக்கிறது. டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்களை நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நாள் முதற்கொண்டு நன்கு அறிவேன். முத்தையாலுப்பேட்டையில் அவர்கள் மருத்துவ மனை நடத்தி வந்ததும், என்போன்ற பலர் அங்கு செல்கிற நேரத்தில் இன்முகம் காட்டி உரையாடியதையும், ஏழைகளோடும், சகல மக்களோடும் சரளமாக அவர் பழகி வந்த தன்மையையும், நான் கண்டிருக்கிறேன். அரசியல் காரணங்களுக்குக்காக யாரையும் வெறுக்காத ஒரு சுபாவத்தையும், தம் கொள்கையில் சிறிதும் உறுதி குறையாமல் அதேசமயத்தில் மற்றவர்களுடைய உரிமையைக் காத்துக்கொடுக்கின்ற தனித் தன்மையையும் ஒருங்கே அவர்கள் நிரம்பப் பெற்றிருந்ததை நாம் பார்த்து வந்திருக்கிறோம். அவர்களுடைய மறைவு தம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட

படி இந்தச் சபைக்கு மட்டும் அல்லாமல் நாட்டுக்கே ஈடு செய்ய முடியாத ஒரு பெரிய இழப்பாகும். அவருடைய மறைவு குறித்து ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கும் தீர்மானத்தை நிறை வேற்றுகின்ற நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் அவர் நமக்குக் காட்டியுள்ள தூய்மையான பாதையில், அவர் இட்டுச் சென்ற நெறியில் இந்தச் சபையில் செயல்படுவதற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய உறுதியே நாம் செலுத்தக் கூடிய சிறந்த மரியாதை என்று கருதுகிறேன். அவர் இந்தச் சட்டமன்றத் தலைவராக இருந்து ஆற்றிய பணியைக் குறித்து, இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள பல்வேறு மாமன்றத் தலைவர்களும் ஒருமுகமாகப் போற்றியிருப்பதையும், பாராட்டிப் பேசியிருப்பதையும் குறித்து இந்த மன்றத்தின் உறுப் பினர்கள் என்ற முறையில் நாம் எல்லோரும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோம். காரசாரமாக சபையில் விவாதம் எழுகின்ற நேரத்தில் நாம் ஒருவருக்கொருவர் அந்தக்கட்சி, இந்தக்கட்சி என்ற வேறுபாட்டால் கடுகடுவென்றிருந்தாலும் சிறிது அவரு டைய முகத்தைப் பார்த்தால் போதும் நம்முடைய கோபம் எல்லாம் மாறிவிடும். ஒரு குழந்தையின் மழலைபோல அழகிய தமிழிலே பேசி, "இதில் என்ன இருக்கிறது? இதில் ஏன் இத்தனை கடுமையான விவாதம்?" என்று சொல்லிக் கோபத்தை மாற்றிக் கொண்டு வந்ததை, சபைக்குத் தலைவராக இருக்கக்கூடியவர்கள் எந்த முறையில் பணியாற்றவேண்டும் என்பதற்கே எடுத்துக்காட் டாக அவர் திகழ்ந்ததை நாம் அறிவோம். அப்படிப்பட்டவர் களுடைய இழப்பினால் தவித்துக்கொண்டிருக்கும் நாட்டுக்கு, அவர்களுடைய தலைமை கிடைக்காமல் தவித்துக்கொண்டிருக்கும் இந்த மன்றத்திற்கு வேறு எந்த வகையிலும் ஈடுசெய்ய முடியாது. சபைக்குப் புதிதாக வந்துள்ள அங்கத்தினர்கள் எந்த வகையில் செயல்படவேண்டும் என்பதற்கு அவர் பெரிதும் துணைபுரிந்து வழிகாட்டினார் என்பதும், சபைக்குத் தலைவராக வரக்கூடியவர் எந்த வகையில் செயல்படவேண்டும் என்பதற்கும் மற்றவர்களுக் குப் பயிற்சி அளித்து வந்தார்கள் என்பதுமே இந்த நேரத்தில் கொஞ்சம் ஆறுதலாக அமைந்திருக்கிறது என்று கருதுகிறேன். அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளும் ஆழ்ந்த அநுதாபத்தில் நானும், என்னுடைய கட்சியினரும், எமது பரி பூர்ணமான பங்கினைத் தெரிவித்துக்கொள்வதுடன் சபை முன்னுள்ள இரங்கல் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

* SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, காலஞ்சென்ற டாக்டர் யு. கிருஷ்ணராவ் அவர்களைக் கடந்த பத்து ஆண்டு காலமாக ஏன் இன்னும் அதற்கு மேலாக நான் பார்த்துவந்திருக்கிறேன். சாதாரணமாக அவர் இருந்த போதும் அனுகிப்பார்த்திருக்கிறேன். கனம் அமைச்சராகப் பதவியில் அவர் இருந்தபோதும் அனுகிப்பார்த்திருக்கிறேன். பின்பு இந்தச் சபையில் அவர் சாதாரண அங்கத்தினராக இருந்த போதும் அணுகிப்பார்த்திருக்கிறேன். கடந்த நான்கு வருஷ காலமாக இந்த மன்றத்தின் சபைத் தலைவராக அவர் இருந்து

17th August 1961] [Sri M. Kalyanasundaram]

பணியாற்றி வந்திருப்பதை இங்குள்ள எல்லோருமே பார்த்திருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் கூறியது போன்று அவர் நமக்கெல்லாம் உற்சாகம் அளித்து வந்தார். நம்மிடத்தில் ஏதாவது மனவேறுபாடு ஏற்பட்டாலோ, கோபதாபம் ஏற்பட்டாலோ அதை தணிக்கக்கூடிய முறையில் நமக்கு நல்ல வழியைக் காட்டிக்கொண்டு வந்தார். அதில் சந்தேகம் இல்லை. இந்தச் சபையிலேயே மிகவும் கடுமையான வேலை சபாநாயகர் ஆசனத்தில் உட்கார்ந்திருப்பதுதான். அமைச்சர்கள் சபையில் உட்கார்ந்து கொள்வதுகூட அவ்வளவு கடினம் அல்ல. அதுவும் கடந்த ஒரு வருஷமாக கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்தபோதிலும் கூட அவர் இந்தச் சபைக்குத் தலைமைதாங்கி பணியாற்றி வந்திருக்கிறார். எப்போதும் உற்சாகமாகவே பணியாற்றி வந்திருக்கிறார். நடுநடுவே சிறிது நேரம் அவருடைய அறைக்குச் சென்றிருக்கிறபோது சபையில் முக்கியமான விவாதம் எழுந்தது என்றால் உடனேயே அறையை விட்டுவிட்டு இங்கே வந்து உட்கார்ந்து சபையை நடத்திச் செல்லவேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம் காட்டிவந்தார்கள். இந்தச் சபையின் கௌரவத்தை எல்லா வகையிலும் உயர்த்தவேண்டுமென்பதோடு, சபையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினருடைய உரிமையையும் பாதுகாக்கவேண்டுமென்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்துவந்தார்கள் என்பதைப் பல சம்பவங்களிலிருந்து புரிந்துகொள்ள முடியும். பதவிக் காலம் பூராவும் அவர் நம்மோடு இருக்க முடியாது போனதற்காகத்தான் நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன். இந்த நான்கு வருஷ காலத்திற்குள் இந்தச் சபையின் புகழ் எப்போதும் நிலைத்திருக்கக்கூடிய முறையில் பல சம்பவங்களோடு அவர் ஈடுபட்டிருந்ததை நாம் மறக்க முடியாது. அவருடைய மறைவானது நம்முடைய சபைக்கு மட்டுமல்லாமல் பார்லிமெண்டரி முறைகளின் வளர்ச்சிக்கே ஒரு பெரிய நஷ்டம் என்று கருதுகிறேன். நாம் எப்பொழுதுமே பிரிட்டிஷ் பார்லிமெண்டரி சம்பிரதாயத்தை அவசியம் இல்லாதபடிக்குப் பின்பற்ற வேண்டாதவாறு நம் நாட்டுக்கு ஏற்றபடி நம்நாட்டுப் பார்லிமெண்டரி சம்பிரதாயங்களை உருவாக்குவதில் அவர் சிறந்த பணிபுரிந்திருக்கிறார். அப்படி உருவாக்குவதிலே இன்னமும் அவரைப் போன்ற அவ்வளவு நேர்மையும், அவ்வளவு தாராள மனப்பான்மையும் உடையவர்கள் அந்தப் பதவியில் இருந்து புதிய கருத்துக்களை, புதிய தத்துவங்களை காட்டவேண்டிய அவசியம் இந்தக் காலத்தில் இருக்கிறது. அப்படிப்பட்ட புதிய கருத்துக்களை, புதிய தத்துவங்களை புகட்டக் கூடிய அரிய சபாநாயகராக டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் இதுவரையிலும் விளங்கி வந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. மனிதர்களுடைய தனி வாழ்விலும், நாட்டின் பொதுவாழ்விலும் அவரை எல்லோரும் எப்போதும் ஒருவகையில் நினைத்துக்கொண்டிருக்கும் வகையில் அவர் பல விஷயங்களைச் செய்துவிட்டு மறைந்திருக்கிறார்கள். நான் என்னுடைய கட்சியின் சார்பிலும், சொந்தமுறையிலும்

ஆழ்ந்த அநுதாபத்தை தங்கள் மூலம் அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்வதோடு இந்தத் தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக்கின்றேன்.

* **Sri S. PAKKIRISAMI PILLAI :** கனம் தலைவர் அவர்களே, இந்த அநுதாபத் தீர்மானத்தில் இதர மெம்பர்களையொட்டி நானும் சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். டாக்டர் யு. கிருஷ்ணு ராவ் அவர்களைப் பற்றி 1930-ஆம் வருஷத்திலிருந்து—அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் சத்தியாக்கிரகம் பண்ணின நாளிலிருந்து எனக்குத் தெரியும். வாலிப மிடுக்கோடு, வைத்தியப் பட்டம் பெற்றவுடன் தன் தகப்பனுருடன் இங்கு சிகிச்சை செய்ய ஆரம்பித்ததிலிருந்து அவருக்குப் பொதுசேவை செய்யவேண்டும் என்ற ஆர்வம் மிகுதி. அதன் காரணத்தினுல் அந்தக்காலத்தில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு போலீஸ்காரர்களினுல் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்ட தொண்டர்களுக்கு எல்லாம் இவர் முதல் சிகிச்சை செய்ய முன்வந்தார். மற்ற டாக்டர்கள் எல்லாம் துறைத்தனத்தாருக்கு பயந்துகொண்டிருந்தபோது, போலீஸ் காரர்களுக்குப் பயந்துகொண்டிருந்தபோது இவர்மட்டும் யாருக்கும் பயப்படாமல் தொண்டர்களுக்குச் சேவை செய்ய முன் வந்ததை நாம் பார்த்தோம். அதற்கப்புறம் அவர்கள் தம்முடைய சேவையால், ஏழைகளுக்கு, தேசத் தொண்டர்களுக்கு கொஞ்சம் கூட மனம் கோணுதபடி வைத்தியசேவை செய்து வந்ததையும் நாம் பார்த்தோம். அதற்கப்புறம் கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் கவுன்சிலராகவும், மேயராகவும் இருந்து நல்ல பணி செய்ததையும் நாம் பார்த்தோம். அதற்கப்புறம் இந்த மன்றத்திற்கு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவந்து மந்திரியாகவும் பணியாற்றியிருக்கிருர். கடந்த நான்காண்டுகளாக இந்த மன்றத்தின் தலைவராகவும் மேலான ஒரு லட்சியத்தையும் வைத்துப் பணியாற்றி வந்தார். அவருடைய சேவை எல்லாத் துறைகளிலும், எல்லாவகைகளிலும்—எல்லோருக்கும் பயன்படும்வகையில் அமைந்தது. அவருடைய சேவை சாதி வெறி, மத வெறி, கட்சி வெறி ஆகிய எல்லாவற்றிற்கு அப்பாற்பட்ட நிலைமையில் இருநதது. அவருடைய மறைவு நமக்குப் பெரும் நஷ்டமாகும். நம்முடைய நாட்டுக்கு மாத்திரம் அல்ல, நம் தமிழ் நாட்டுக்கு மாத்திரம் அல்ல நம்முடைய சென்னை நகரத்திற்கே பெரும் நஷ்டமாகும். இந்தத் தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

* **Sri M. P. SUBRAMANIAM :** கனம் சட்டமன்றத்துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே சென்ற நான்கு ஆண்டு காலமாக அவைத்தலைவராக இருந்த டாக்டர் யு. கிருஷ்ணு ராவ் அவர்கள் நம்மிடையிலிருந்து பிரிந்தது உண்மையிலேயே நமக்கெல்லாம் தாங்கமுடியாத துக்கத்தை அளிக்கிறது. சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு நானும் என் இணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

டாக்டர் யு. கிருஷ்ணு ராவ் சென்னை நகரத்தில் பல துறைகளில் ஈடுபட்டு சிறந்து விளங்கியதாகக் கேள்விப்படுகிறோம். சட்ட சபையைப் பொறுத்த வரையில், கடந்த 10 ஆண்டுகளாக நான்

17th August 1961] [M. P. Subramaniam]

அவர்களைத் தெரிந்துக்கொள்ளும் வாய்ப்பு இருந்தது. அவர்கள் கடந்த சட்டசபையிலே இரண்டு ஆண்டுகாலம் அமைச்சராக இருந்தகாலத்தில் அந்தத் துறையில் மிக திறமையாகச் செயலாற்றியதை, அதுவும் எதிர்க்கட்சி மிகவும் பலமாக இருந்தகாலத்தில் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஆணித்தரமாக பதில் அளித்ததை உண்மையிலேயே என்போன்றவர்கள் உணர்வார்கள். அவர்கள் இந்தச் சட்டசபையில் சென்ற நான்கு ஆண்டுகாலமாக தமிழ் நாடு சட்டசபையின் பாரம்பரியத்தைப் பாதுகாத்து மேலும் பேணி வளர்த்த பெருமை அவருக்கே உரியதாகும். இது பெருமைப்படக்கூடிய விஷயம். அவர்கள் நம்மிடையே இப்போது இல்லாவிட்டாலும் அவர்களாலே பாதுகாக்கப்பட்டுப் பேணி வளர்த்த பாரம்பரியத்தைத் தொடர்ந்து வளர்ப்பது நாம் அவர்களுக்குக் காட்டக்கூடிய மரியாதையாகும் என்பதைச் சொல்லிக் கொண்டு, இந்தச் சட்டசபையில் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்திற்கு என் முழு இணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: I also wish to associate myself with the sentiments expressed by the Hon. the Leader of the House and the other Leaders of parties. For me, personally, it is a great loss and no words are adequate to express my sorrow. He had not only been a good Speaker but, with his genial temperament and pleasant manners, he had always kept the House in good humour and perfect order. The fitting tributes that have been paid to him are indeed a great compliment to the esteem and affection in which he was held by all sections of the House. He was a great social worker and was the Pradesh Convenor of the Bharat Sevak Samaj in Tamilnad. He was also a great lover of sports and his sportsmanship was very much in evidence in the way in which he conducted the proceedings of this Assembly, offending none, but at the same time the House conducted its business with due decorum under his able guidance.

His loss has removed from our midst a good parliamentarian and I have lost indeed an esteemed friend and colleague.

By way of passing the resolution, I request the hon. Members to stand in silence for two minutes.

Then the resolution was carried *nem con*, all the Members standing for two minutes.

DEPUTY SPEAKER: As a mark of respect, the House is adjourned.

II.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

189. *Notification issued with G.O. Ms. No. 3322, Home, dated 21st October 1960, under the Madras Motor Vehicles Rules, 1940, introducing a new rule 49-AA after rule 49-A. [Laid on the table of the House under section 133 (3) of the Madras Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

190. *Notification issued with G.O. No. 5232, Revenue, dated 20th December 1960, exempting from sales tax and registration for a further period of two years from 1st April 1960, the manufacture*